ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2415/66 - 2024 දෙසැම්බර් මස 21 වැනි සෙනසුරාදා - 2024.12.21

2415/66 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21ஆந் திகதி சனிக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டம்**

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அனுர குமார திசாநாயக்க ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இங்குள்ள அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தை பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கும் நாளிலிருந்து செயல் வலுப்பெறும் விதமாக வெளியிடுகிறேன் .

2024 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதிய 2384/30 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிப்பை இத்தால் இரத்துச் செய்கிறேன் .

**அனுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

2024 , திசெம்பர் 20.

1A - G 43340 — 379 (2024/12)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்**

**I ஆவது அட்டவணை**

I ஆவது நிரல்

**2025 , சனவரி முதல் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் உதவி வழங்கும் திட்டம்**

| | *நலன்புரி நன்மைகளைப் பெறும் சமூகப் பிரிவினர்* | *கொடுப்பனவு வழங்கும் கால வரை* | *நலன்புரிப் பயனாளிகள்/ குடும்பங்களின் எண்ணிக்கை** | *குடும்ப அலகிற்கு முன்மொழியப்பட்ட மாதாந்த நலன்புரி நன்மைத் தொகை (ரூபா)*** |
|---|---|---|---|---|
| I | நிலையற்றவர்கள் | சனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை அந்த இரண்டு மாதங்களும் அடங்கும் | 480,000 | 5,000 |
| II | ஆபத்திற்குட்பட்டவர்கள் | சனவரி 2025 முதல் திசெம்பர் 2025 வரை, அந்த இரண்டு மாதங்களும் அடங்கும் | 480,000 | 5,000 |
| III | வறியவர்கள் | சனவரி 2025 முதல் யூன் 2026 வரை அந்த இரண்டு மாதங்களும் அடங்கும் | 960,000 | 10,000 |
| IV | மிகவும் வறியவர்கள் | சனவரி 2025 முதல் யூன் 2026 வரை அந்த இரண்டு மாதங்களும் அடங்கும் | 480,000 | 17,500 |

* குறிப்பு - இந்த எண்ணிக்கையின் பெறுமதி பயனாளியின் குடும்பக் கணக்கீட்டினைப் பொறுத்து சற்று மாறுபடலாம்.
** குறிப்பு - குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது 02 இற்கு குறைவாக இருந்தால், பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவில் அரைவாசி மாத்திரமே வழங்கப்படும்.

**II ஆவது அட்டவணை**

**மாற்றுத்திறனாளிகள், காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள், முதியோர் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள்**

| நலன்புரி உதவிகளைப் பெறும் சமூகப் பிரிவினர் | | நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் நபர்களின் எண்ணிக்கை | மாதாந்த நலன்புரி உதவித்தொகை (ரூபா) |
|---|---|---|---|
| (i) | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி பெறுபவர்கள் | 410,000 | 7,500 |
| (ii) | சிறுநீரக நோய்க்கான உதவிபெறுபவர்கள் | 50,000 | 7,500 |
| (iii) | முதியோர்களுக்கான உதவி பெறுபவர்கள். | 820,000 | 3,000 |

குறிப்பு - அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் அந்த இரண்டு மாதங்களையும் சேர்த்து சனவரி 2025 முதல் யூன் 2025 வரை வழங்கப்படும். நலன்புரி நன்மைகள் பதிவேட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு சனவரி 2025 முதல் அந்த மாதத்தையும் சேர்த்து அஸ்வெசும நலன்புரி நன்மைகள்திட்டத்தின் மூலம் நன்மைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.

2024 , மே மாதம் 17ஆம் திகதிய 2384 /30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டம் இத்தால் இரத்து செய்யப்படுகிறது, ஆனால், அதன் I ஆவது அட்டவணை மற்றும் II ஆவது அட்டவணை தொடர்பாக, நலன்புரி நன்மைகளுக்காக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட மேலும் பல்வேறு காரணங்களால் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள பயனாளிகள், மேல்முறையீடுகளைச் சமர்ப்பித்து தற்போது பரிசீலனைக்குட்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு, அவர்களின் தகுதியிற்கேற்ப 2024.12.31 வரை குறிப்பிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.

EOG 12-0226

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.